Date : 09.06.2026.

வா.சா.2 : லெட்சுமணகுமார்

வா.சா. 2 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது சொந்த ஊர் கோபாலசமுத்திரம். நான் ஐடிஐ படித்துள்ளேன். நான் விவசாயம் பார்த்து வருகிறேன். கோபால சமுத்திரத்தில் நான் மருத்துவகடை வைத்திருந்தேன். தற்போது இல்லை. வாதி மார்க்கண்டன் என்பவரை எனக்கு விவசாயம் சார்ந்த பழக்கம். எனக்கு 3 ஏக்கர் சொந்த தோட்டம் உள்ளது. அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. மார்க்கண்டனுக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதியும் அவரின் மனைவியும் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதியை எனக்கு 15 வருடங்களாக எனக்கு பழக்கம். 15 வருடங்களாக எனக்கு விவசாயம் மற்றும் படிப்பு சம்மந்தமாகவும் பழக்கம். நான் அவரிடம் மாணவராக இருந்ததில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றாலும் வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் கண்ட 1,2 பிரதிவாதிகள் எனக்கு நேரடியாக பழக்கம் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் 20.06.2001 ம் தேதியில் உடன்படிக்கை ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தட்டச்சு பிழை 2021 ல் ஒப்பந்தம் ஏற்பட்டது. நான் சொல்லும் ஒப்பந்தத்தில் என்னென்ன சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் சொல்லப்பட்டுள்ளது விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதியும், 1, 2 பிரதிவாதிகளும் ஒப்பந்தத்திற்கு முன்பு என்னென்ன பேசிக்கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஒப்பந்தம் எந்த தேதியில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 20.06.2021 ல் ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தம் அனைத்தும் வாதியால் தயார் செய்து கொண்டு செல்லப்பட்டது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் முன்னிலையில் தயார் செய்யப்பட்டது. 1,2 பிரதிவாதிகள் ஊர் என்ன என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி ஒப்பந்தம் ராஜேஷ் என்பவர் வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. ராஜேஷ் என்பவரின் வீடு, கதவு எண், முகவரி தெரியுமா என்றால் தெரியாது. ராஜேஷ் என்பவரை அதற்கு முன்பு பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. ஒப்பந்த முத்திரை தாளில் என்ன எழுதப்பட்டது என்ற

விவரம் எனக்கு தெரியுமா என்றால் செண்டுக்கு ரூ50 ஆயிரம் பேசி ரூ. 2,50,000/- முன்பணமாக கொடுக்கப்பட்டது எழுதப்பட்டது. அந்த விவரம் 2 தாளில் எழுதப்பட்டது. அந்த தாளில் வாதி எத்தனை கையொப்பம் செய்தார், 1, 2 பிரதிவாதி எத்தனை கையொப்பம் செய்தார் என்றால் ஒரு கையெழுத்து போட்டார்கள். நான் ஒரு சாட்சி கையெழுத்து போட்டேன். ராஜேஷ் ஒரு கையெழுத்து போட்டார். நான் 1, 2 பிரதிவாதிகளை நேரடியாக தெரியாது என்றும் ஒப்பந்தத்தில் சாட்சி கையெழுத்து போட்டதாக வாதி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மறுநாள் சர்வேயர் வைத்து அளவீடு செய்ததாக முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சர்வேயரை யார் அழைத்து வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. தனியார் சர்வேயர்தான் வந்தார். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் அரசு சர்வேயர் வந்தார் என்று சொல்லியிருந்தால் தவறு என்றால் சரிதான். அவர் அளக்கும் போது யரெல்லாம் இருந்தோம் என்றால் நானும் வாதியும், ராஜேஷ் என்பவரும் இன்ஜினியரும் இருந்தோம். இன்ஜினியர் எந்தெந்த சர்வே எண்ணில் எவ்வளவு அளந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் மறுநாள் 21.06.2021 ம் தேதி நான் கூறுவது போல் சர்வேயர் மூலம் அளவீடு செய்யவில்லை என்றும் அன்றைய தேதியில் ராஜேஷ் டம் ரூ.50 ஆயிரம் கொடுக்கப்படவில்லை என்றும் ராஜேஷ் என்பவரிடம் கையொப்பம் பெறப்படவில்லை என்றாலும் சரியல்ல. வாதி எனக்கு விவசாயத்தின் மூலம் பழக்கம் என்பதால் அவருக்கு வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.